**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1105/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.1
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜ்குமார் | -- | |
| Father's Name | பெரியசாமி | Calling | இணை இயக்குநர் |
| Village | கடலூர் | Religion | இந்து |
| Taluk | கடலூர் | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 01st day of September 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். ராஜபாளையம், கதவு எண்.70, அழகை நகர் என்ற முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜெயஜோதி அண்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலையில் 15.07.2024 அன்று பிற்பகல் 04.45 மணியளவில் விபத்து நேர்ந்து தொழிலாளர் சரஸ்வதி என்பவர் மரணமடைந்துவிட்டார் என்ற விபரத்தினை தொலைபேசி வாயிலாக நிர்வாகத்தினடமிருந்து தகவல் அறிந்தேன். அதன் அடிப்படையில் 16.07.2024 அன்று முற்பகல் 11.40 மணியளவில் மேற்படி தொழிற்சாலையில் விபத்து குறித்து குழுவாக புலனாய்வு செய்தேன். அப்போது தொழிற்சாலையில் கீழ்கண்ட விதிமீறல்கள் கண்டறியப்பட்டது. இத்தொழிற்சாலையில் காளிஸ்வரன் என்ற போர்க் லிப்ட் டிரக் ஆப்ரேட்டர் குடோனிலிருந்து பஞ்சு மூட்டைகளை இயந்திரத்தில் எடுத்துச்சென்று புளோரூம் மிக்சிங் பகுதியில் இறக்கி வைக்கும் பணியினை செய்துக்கொண்டிருந்தார். 15.07.2024 அன்று பிற்பகல் 04.45 மணியளவில் இரண்டு பேல் மூட்டைகளை டிரக்கில் ஏற்றிக்கொண்டு மிக்சிங் பகுதிக்கு சைலிங் ஒலி எழுப்பிக்கொண்டே சென்றுக்கொண்டிருந்தார். அப்போது புளோரூம் இயந்திரத்தின் சோக் ஆகி அவ்வியந்திரத்திலிருந்து சைரன் ஒலி வந்துக்கொண்டிருந்தது. அப்போது அவ்வியந்திரத்திற்கு பக்கத்தில் மைக்ரோ டஸ்ட் பிலிட்டர் இயந்திரத்தில் வேலை செய்துக்கொண்டிருந்த திருமதி.சரஸ்வதி, வயது–53, க/பெ. பாலையா என்ற தொழிலாளர் இயந்திரத்திலிருந்து வெளியே நடந்து வந்துள்ளார். அப்போது அவ்வழியாக வந்த போர்க் லிப்ட் டிரக் அவர் மீது மோதி சக்கரம் அவரது வலது காலில் ஏறி பலத்த உடற்காயம் அடைந்துள்ளார். அவரை உடனடியாக நிர்வாகத்தினர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். அவரை மருத்துவர் பரிசோதனை

செய்ததில் அவர் ஏற்கனவே இறந்துபோய்விட்டதாக தெரிவித்துள்ளார். இந்த விபத்திற்கு காரணமானது போர்ட் லிப்ட் செல்லும் வழியில் தொழிலாளர்கள் குறுக்கே சென்றுவிடாமல் இருக்கும் வகையில் தொழிலாளர் நடந்து செல்வதற்கு தனியாக நடைபாதையென்று தெளிவாக குறிப்பிடப்படாமல் இருந்ததாலும் இயந்திரத்திலிருந்து சைரன் ஒலி எழுப்பும்போதும் போர்க் லிப்ட் டிரக்கிலிருந்து ஒலி எழுப்பும்போதும் ஒரே சேர ஒலிக்கும்போது போர்க் லிப்ட் வருவதை கவனிக்காமல் இருப்பதை தடுக்கும் வகையில் வெளிச்சத்தின் மூலமாக போர்க் லிப்ட் வருவதை அறிந்துக்கொள்ளும் வகையில் Flashing Light பொருத்தப்படாமல் இருந்ததாலும் போர்க் லிப்ட் வரும் பாதையில் இயந்திரத்திலிருந்து வெளியே வரும்போது குறுக்கே சென்றுவிடாமல் தடுக்கும் வகையில் உறுதியான தடுப்புகள் இயந்திரத்திலிருந்து போதுமான தூரத்தில் பொருத்தப்படாமல் இருந்ததாலும் குடோனிலிருந்து மிக்சிங் பகுதிக்கு செல்வதற்காக போர்க் லிப்ட் வளைவுகளில் இயந்திரத்திலிருந்து போதிய இடைவெளிவிட்டு செல்லாமல் இயந்திரத்திற்கு அருகிலேயே ஓட்டி சென்றதாலும், வளைவு திருப்பங்களில் போர்க் லிப்ட் டிரக் வருவதை அறிந்துக்கொள்ளும் வகையில் Convex Mirror அமைக்கபடாமல் இருந்ததாலும் போர்க் லிப்ட் பிரேக்கை பிடித்து நிறுத்தினாலும் அது உடன் நிற்காமல் சிறிது தூரம் சென்ற பின்பே நிற்கும் என்பதால் தொழிலாளர் சரஸ்வதி நடந்து வருவதை பார்த்தவுடன் போர்க் லிப்ட் டிரக்கை உடன் நிறுத்தி அவரை வழியிலிருந்து விலகுமாறு சைகை செய்து எச்சரித்து அவர் விலகியே பின்பே போர்க் லிப்ட் டிரக்கை இயக்காமல் தொடர்ந்து இயக்கி பிரேக் மட்டும் பிடித்து நிறுத்த முயற்சித்ததாலும், போர்க் லிப்ட் ஆப்ரேட்டருக்கு பாதுகாப்பாக போர்க் லிப்ட் டிரக்கை ஓட்டுவது குறித்து தொடர் பயிற்சியும், போர்க் லிப்ட் செல்லும் வழியில் அருகில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போர்க் லிப்ட் டிரக் வரும்போது பாதுகாப்பாக இருப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படாததாலும் போர்க் லிப்ட் வருவதை அறியாமல் வேலையின்போது நடந்து சென்ற திருமதி.சரஸ்வதி என்ற தொழிலாளர் போர்க் லிப்ட் டிரக் மோதி அவர் கிழே விழுந்து அவரது வலது தொடை மீது சக்கரம் ஏறி சக்கரத்தில் சிக்கி பலத்த உடற்காயம் பின்னர் மரணமும் ஏற்பட இந்த விபத்திற்கு காரணமாகும். மேற்கண்ட விதிமீறல்கள் குறித்து ஆய்வு அறிக்கை தயார் செய்தேன். மேற்படி **ஆய்வு அறிக்கை அசாஆ 1** ஆகும். அந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் காரணம் கோரும் அறிவிப்பு தயார் செய்து தொழிற்சாலை உரிமையாளருக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி **காரணம் கோரும் அறிவிப்பு அசாஆ 2** ஆகும். அதற்கான **ஒப்புதல் அட்டை அசாஆ 3** ஆகும். மேற்படி காரணம் கோரும் அறிவிப்பிற்கு உரிமையாளர் கோகுல் என்பவர் வழங்கிய **பதில் அறிவிப்பு அசாஆ 4** ஆகும். இந்த விபத்து குறித்து நான் தயார் செய்த விரிவான **விபத்து அறிக்கை அசாஆ 5** ஆகும். உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட பதில் ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லை என்ற காரணத்தினால் மேல் நடவடிக்கை தொடரப்படும் என்று உரிமையாளரக்கு தெரிவித்த **கடிதம் அசாஆ 6** ஆகும். உரிமையாளர் மீது வழக்கு தொடர்வதற்காக வழக்கு முன்மொழிவு தயார் செய்து சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இயக்குநர் அவர்களுக்கு நான் அனுப்பி வைத்த **பேராணை அசாஆ 7** ஆகும். அதன்

பெயரில் இயக்குநர் அவர்கள் வழங்கிய வழக்கு அனுமதிக்கான **அனுமதி குறிப்பாணை அசாஆ 8** ஆகும். இவ்விபத்து குறித்து தொழிற்சாலை நிர்வாகத்தினடமிருந்து தெரிவிக்கப்பட்ட **படிவம் 18 அசாஆ 9** இதன் அசல் CC.NO.1106/2024 வழக்கு கோப்பில் உள்ளது (எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சபணை தெரிவிக்கிறார்) (நகல்) ஆகும். ஆய்வின்போது தொழிலாளர் திரு.சுப்புராஜ் என்பவர் வழங்கிய **வாக்குமூலம் அசாஆ 10** ஆகும். கண்ணன் என்பவர் வழங்கிய **வாக்குமூலம் அசாஆ 11** ஆகும். போர்க் லிப்ட் டிரக் ஆப்ரேட்டர் காளிஸ்வரன் என்பவர் வழங்கிய **வாக்குமூலம் அசாஆ 12** ஆகும். ஆய்வின்போது எடுக்கப்பட்ட **புகைப்படங்கள் 2 எண்ணம் அசாஆ 13** ஆகும்.

(சாட்சியின் கோரிக்கையின் பெயரில் அசல் ஆவணங்களை கொண்டு வருவதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 01st day of September 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**